கழகத்தின் வாளாகவும் கேடயமாகவும் திகழுகிறது கழக வழக்கறிஞர் அணி! கழகத் தோழர்களுக்குக் காவலர்களாக –

# களத்தில் போராளியாக களமாடுகிறது தி.மு.க. வழக்கறிஞர் அணி!

## தென் மண்டல – கழக வழக்கறிஞரணிக் கூட்டத்தில் – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு எம்,எல்,ஏ, உரை!

**மதுரை, ஆக. 12-**

**“கழகத்தின் வாளாகவும் கேடயமாகவும் திகழுகிறது கழக வழக்கறிஞர் அணி” என்றும் - “கழகத் தோழர்களுக்குக் காவலர்களாக, களத்தில் போராளியாக களமாடும் வழக்கறிஞர் அணி” என்றும் - தென் மண்டல கழக வழக்கறிஞரணிக் கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நாள்முதற்கண் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கழக சட்டத்துறையினுடைய கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களிடத்திலே உரையாற்றுவதற்கான நல்ல வாய்ப்பை வழங்கியிருக்கக் கூடிய சட்டத்துறைக்கும், குறிப்பாக சட்டத்துறையினுடைய செயலாளர் மதிப்பிற்குரிய அண்ணன் என்.ஆர். இளங்கோ அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில், தாய் கழகத்திற்குத் துணையாகப் பல்வேறு அணிகள் துணை அமைப்புகளாகச் செயல்பட்டு வருவதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஒரு காலத்தில் சார்பு மன்றங்கள் என்கின்ற வகையில், அவை கழகத்திற்கு பலமூட்டி வந்த காலம் ஒன்று உண்டு. அதற்குப் பின்னாலே கழகத்திலே பல்வேறு அணிகளை உருவாக்கக்கூடிய வாய்ப்பு வந்தபோதும், அந்த அணிகள் ஒவ்வொன்றும் தனக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பொறுப்பினைத் திறம்பட நிறைவேற்றிச் செயலாற்றி வந்தாலும், நம்முடைய வழக்கறிஞர் அணிக்கு மட்டும் மற்ற அணிகளுக்கு இல்லாத ஒரு பெரும்பெருமை உண்டு.

### களத்திலே சட்டத்துறை!

மற்ற அணிகள்,’அணிகள்’ என்று அழைக்கப்பட்டாலும், வழக்கறிஞர் அணி ஒன்றுதான் கழகத்திலே ‘சட்டத்துறை’ என்ற அளவில் அழைக்கப்பட்ட ஒரு அணி. அது வேறு எந்த அணிக்கும் கிடைக்காத ஒரு கௌரவம்.

நான் சட்டமன்றத்திலே கூட்டுறவுத் துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதம் வருகிறபோது ஒன்றைக் குறிப்பிடுவேன். அரசாங்கத்திலே பல்வேறு துறைகள் இருக்கலாம்; ஆனால், பல்வேறு துறைகள் இருந்தாலும் கூட்டுறவு ஒன்று மட்டும்தான் ஒரு ‘இயக்கம்’ என்ற வகையில் அறியப்பட்டது என்று சொல்வேன். ‘Cooperative Movement’ என்று வரக்கூடிய சிறப்பை அந்தத் துறை பெற்றது என்று சொல்வேன்.

அதேபோல, கழகத்திலே பல்வேறு அணிகள் இருந்தாலும், அணிகளுக்கெல்லாம் மேலாக அது ஒரு‘துறை’ என்கின்ற அளவில் அந்தச் சிறப்பைப் பெற்றிருக்கக்கூடியது இந்தத் துறை. இந்தச் சிறப்பு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல; கழகத்தின் தொடக்க காலத்திலிருந்து மூத்த வழக்கறிஞர்கள் பெரும்பாலானோர் இடம்பெற்றிருக்கக்கூடிய ஒரு அமைப்பு, ஒரு அரசியல் கட்சிக்கு வாய்க்கப்பெற்றது என்று சொன்னால், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் நான் உறுதியோடு சொல்வேன், அந்த வாய்ப்பைப் பெற்ற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்!

அந்த வழிவழியாக வந்த பரம்பரையில் தான் இன்றைக்கு அண்ணன் என்.ஆர். இளங்கோ போன்றவர்கள் அந்த மூத்த வழக்கறிஞர்களாக இன்றைக்கு அந்தப் பணியினைத் திறம்பட செய்வதோடு, தங்களுக்குப் பின்னாலே நாற்றாங்காலில் உங்களைப் போல ஏராளமான வழக்கறிஞர்களை இன்றைக்கு வழிநடத்தி வந்திருக்கிறார்கள்.

வழக்கறிஞர் அணியினுடைய பணி என்பது நீதிமன்றங்களிலே மட்டும் முடங்கிப் போவதைத் தாண்டி, இன்றைக்கு அரசியல் தளத்திலே இயங்கக்கூடிய இந்த அணி மிக முக்கியமான பணிகளைச் செய்திருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், வேறு எந்த அரசியல் கட்சியும் எண்ணிப்பார்க்காத அளவில், தேர்தல் களத்திலும் மிக முக்கியமான பங்காற்றக்கூடிய ஒரு பொறுப்பினை வேறு எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத வகையில் ஒரு அணி மேற்கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வழக்கறிஞர் அணி என்பதை நாம் பெருமையாகச் சொல்ல முடியும்.

தேர்தலுக்கு முன்பும் சரி, தேர்தல் நடைபெற்ற காலத்திலும் சரி, ஏன் தேர்தல் முடிவுகள் வந்ததற்குப் பிறகு தேர்தலுக்குப் பின்னால் இருக்கக்கூடிய காலங்களிலும் சரி, இந்த மூன்று காலங்களிலும் தேர்தல் பணியினுடைய பொறுப்பை மிகச்சரியாக நம்முடைய வழக்கறிஞர் அணி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. காரணம், வழக்கறிஞர் அணி தன்னுடைய பொறுப்புகளை விரிவுபடுத்தி அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த காலத்தைஎடுத்துக் கொள்வோம்;மிகக்குறுகிய காலத்தை எடுத்துக் கொள்வோம். இந்த ஒரு மாத காலத்தை மட்டும் கூட நீங்கள் எடுத்துக்கொண்டால், இந்த அணியினுடைய செயல்பாடுகளை உற்று கவனித்தீர்கள் என்றால் ஒன்றை புரிந்துகொள்ள முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஒரு வார காலத்தில் மிகப்பெரிய எழுச்சியைப் பெற்றிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய அருமை அண்ணன் மூர்த்தி அவர்கள் அதை அழகாகச் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்குப் பிறகு இயற்கையாக ஏற்படக்கூடிய ஒரு சிறு சோர்விலே நம்முடைய தோழர்கள் சிக்கியிருந்த நேரத்தில், விறுகொண்டு எழுந்து அத்தனை பேரையும் வீதிக்கு வரவழைத்து, ‘திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தமிழ்நாட்டின் வரலாற்றில் அழிக்க முடியாத, அசைக்க முடியாத ஒரு இயக்கம்; இந்த இயக்கம் ஓர் எஃகுக் கோட்டை’ என்பதை நிரூபிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை, ஆளக்கூடிய தமிழகவெற்றிக்கழகம் தானாக நமக்குத் தந்தது.



ஆயிரம் பேர் கூடி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, விளக்க உரைகள் நடத்தி, மாநாடுகள் நடத்தி நமக்குக் கிடைத்திராத ஒரு எழுச்சியை, நம்முடைய இளைஞரணியின் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஒரு காலை நேரத்தில் அவர்கள் செய்த அந்தக்கைது இயற்கையாகவே நமக்குக் கொடுத்தது.

### எதிர்க்கட்சித் தலைவர் கைது!

உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும், 2001 இல் இதேதான் நடந்தது. நள்ளிரவிலே சென்று கலைஞரை கைது செய்தார்கள். இந்த நாடே கொந்தளித்தது. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அத்தனை பேரும் வீதிக்கு வந்தார்கள். அன்றைக்குத் தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைச் சிறையில் வைப்பதற்குக் கூட இடம் கிடைக்காமல், மதுரை சிறைச்சாலையின் வெளியே இருக்கக்கூடிய அரசரடி மைதானத்தில் அன்றைக்கு இரவு முழுவதும் கழிக்கக்கூடிய நிலைமை கழகத் தோழர்களுக்கு வந்தது. கிளைச் சிறைகளில் வைக்க முடியவில்லை; கல்யாண மண்டபத்தில் வைக்க முடியவில்லை;எந்த இடத்திலும் வைக்க முடியவில்லை.அத்தனை கழகத் தோழர்கள் அன்றைக்குக் களத்திற்கு வந்தார்கள்.

அதே போன்ற ஒரு உணர்வை மீண்டும் தட்டியெழுப்பிய நிகழ்வாக இந்த முறை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரின் கைது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அமைந்தது. ஆனால், அது அமைகிறபோது அந்த இடத்தை லாவகமாகக் கையாளக்கூடிய பொறுப்பு யாருக்கு வந்தது என்று கேட்டால், கழகத்தினுடைய சட்டத்துறைக்கு, கழகத்தினுடைய வழக்கறிஞர் அணிக்கு வந்தது. அந்தப் பொறுப்பை அது ஏற்றுக்கொண்டது.

கழகத்தினுடைய தோழர்கள் அத்தனை பேரும் தொலைக்காட்சியிலே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; ‘என்ன நிகழப்போகிறது, என்ன நடைபெறப் போகிறது’ என்று. அங்கே அந்த இடத்தில் நம்முடைய சட்டத்துறையினுடைய செயலாளர் என்.ஆர். இளங்கோ அவர்களும் மூத்த வழக்கறிஞர்களும் செல்லக்கூடிய அந்தக் காட்சியினைப் பார்த்தவுடன் நம்மிடத்திலே ஒரு நம்பிக்கை பிறந்தது, ‘ஆஹா! வந்துவிட்டார்கள், நமக்கு எந்தப் பிரச்சினையும் வராது’ என்று. அவர்களுக்குப் பாதுகாப்பாக அவர்கள்செல்கிறார்கள்.காவல்துறை அதிகாரிகளிடத்தில் கடுமையாக நம்முடைய வாதங்களை முன்வைக்கிறார்கள்.

அதற்குப்பின்னால், அவரைக் கைது செய்து அழைத்துச்செல்வதற்கு முன்னால், இந்த மிகக் குறுகிய காலகட்டத்திற்குள்ளாக ஒரு ராஜதந்திர நடவடிக்கை என்று கூட நான் சொல்லலாம்; அதைப் பற்றி நான் விரிவாகச்சொல்ல விரும்பவில்லை. அந்த இடைப்பட்ட மிகக் குறுகிய கால அவகாசத்திலாக உயர்நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி, உயர்நீதிமன்ற நீதியரசரிடத்திலே ஓர் உத்தரவினைப் பெறுகிறார்கள். ‘நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை 12 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக நீங்கள் கைது செய்யக்கூடாது; ஆனால்அவர்கள்கைதுசெய்து அழைத்துச் செல்லும்நிலையிலும்முறையிட்டு, அப்படி நீங்கள் அவரை அழைத்துச் சென்றிருக்கிறீர்களென்று சொன்னால், அன்றைக்குள்ளாகவே அவரை விடுவிக்க வேண்டும்’ என்கின்ற உத்தரவை இந்த வழக்கறிஞர் அணி அன்றைக்குப் பெறுகிறது.

நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எல்லோரும் ‘என்ன தீர்ப்பு வருகிறது’ என்று பார்க்கிறோம், மிகச் சரியான, மிக அற்புதமான தீர்ப்பை அன்றைக்கு கழகத்தினுடைய வழக்கறிஞர் அணி நமக்கு பெற்றுத் தருகிறது.

### காவல்துறை திணறியது!

தஞ்சை மாநகரத்திற்கு அவரை அழைத்துச் செல்கிறார்கள். சென்னையிலிருந்து தஞ்சை மாநகரத்திற்கு எந்த வழியில் அழைத்துச் செல்ல முடியும் என்பதற்கு அன்றைக்குக் காவல்துறை எவ்வளவு திணறியது என்று நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். அரியலூர் வழியாக அழைத்துக் கொண்டு வருகிறார்களா, கும்பகோணத் தின் வழியாக அழைத்துக்கொண்டு வருகிறார்களா, அல்லது திருவெறும்பூர் வழியாக வருகிறார்களா என்ற குழப்பமெல்லாம் முடிந்து, அவரை தஞ்சை நகருக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆனால், எந்தக் காவல் நிலையத்தில் அவர் மீது வழக்கு பதியப்பட்டதோ, அந்தக் காவல் நிலையத்திற்கு அவரை அழைத்துச் செல்ல முடியாத அளவிற்கு கழகத்தின் தோழர்கள், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் தஞ்சை மாநகரத்தில் அன்றைக்குக் குழுமியிருந்தார்கள். அப்படி குழுமியிருக்கக்கூடிய ஒரு எழுச்சி வாய்ந்த நிலையில், கழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலை வரை, கழகத்தினுடைய மாண்பைக் கட்டிக் காக்கக்கூடிய ஒரு அற்புதமான காரியத்தைக் கழகத்தினுடைய வழக்கறிஞர் அணி அன்றைக்குச் செய்து காட்டியது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒவ்வொரு தோழரும் மறந்துவிட முடியாது.

அதுமட்டுமல்ல தோழர்களே, இதுதான் நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரு மிக முக்கியமான ஒன்று. கழகத்தினுடைய தோழர்கள் ஆங்காங்கே இருக்கிறீர்கள்; உங்களுக்குப் பாதுகாப்பாக நாங்கள் இருக்கிறோம். தோழர்களே, நாம் இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறோம். ஆளுங்கட்சியில் இருக்கிறபோது கழகத்தினுடைய வழக்கறிஞர் அணி பல காரியங்களைச் செய்திருக்கிறது. இதே இடத்தில் நாம் கூட்டம் போட்டுப் பேசியிருக்கிறோம். எப்படி தேர்தல் களத்தை அணுகுவது என்பது பற்றி நமக்கு பாடங்கள் நடத்தியிருக்கிறார்கள்.

இப்போது எதிர்க்கட்சியில் இருக்கிறோம். எதிர்க்கட்சியில் வருகிறபோது கூட நம்மை எப்படி பாதுகாத்துக் கொண்டு வர வேண்டும், நாம் ‘Defensive’ ஆக மாத்திரம் இருக்கக் கூடாது, தேவைப்பட்ட நேரத்தில் நம்முடைய வாதங்களை வலுவாக வைத்து, நமக்கு வரக்கூடிய ஆபத்துகளையும் தடுத்து நிறுத்தி, எதிராளிக்கு எதிராகத் திருப்பியும் போராடக்கூடிய அந்தச் சக்தியை வழங்கக்கூடிய அளவில் நம்முடைய வழக்கறிஞர் அணி மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது.

### நமக்காக போராடக்கூடியவர்கள்!

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் பார்த்தீர்கள் என்றால், கொளத்தூர் தொகுதியில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாக நாடு முழுதும் வாக்களித்து வந்ததற்கு அப்புறம், இதுவரை அதில் எந்தப் பிரச்சினை யும் இல்லை என்றுதான் நம்பிக் கொண்டிருந்தார்கள். முதன்முறை யாக அந்த எண்ணத்தை உடைத்து, ‘மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் தவறு நடந்திருக்கிறது, இந்த இயந்திரம் வேலை செய்யவில்லை, பழுதுபட்டிருக்கிறது, இந்தத் தேர்தலில் முறைகேடு நடப்பதாக நாங்கள் கருதுவதற்கு முகாந்திரங்கள் இருக்கிறது’ என்பதை அங்கே சென்று நிறுவக்கூடிய அளவில், ஒரு பக்கம் இந்த வேலைகள்; இன்னொரு பக்கம் பார்த்தீர்கள் என்றால் நமக்காகப் போராடக்கூடிய வேலைகள். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துக்கொண்டு ஒரு குறுகிய காலகட்டத்தில் வழக்கறிஞர் அணி இன்று எடுத்துச் சென்றிருக்கிறது.

எனவேதான், இந்த அணியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, இன்றைக்கு மிகக் குறுகிய கால அழைப்பில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து, நம்முடைய தென்மண்டலத்திலிருந்து இவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள். ‘வந்திருக்கக்கூடியவர்கள் ஒட்டுமொத்தமாக எல்லோரும் வாருங்கள்; வழக்கறிஞர்கள் அல்லது அடிமட்டத்தில், காவல் நிலைய அளவில் இருக்கக்கூடிய எல்லா வழக்கறிஞர்களும் வாருங்கள்’ என்று கூப்பிட்டிருந்தால், இந்த மண்டபத்தில் நிச்சயமாகக் இடமிருந்திருக்காது. ஆனால், மாவட்ட அளவில் இருக்கக்கூடிய முக்கியமான நிர்வாகிகள் வாருங்கள் என்றுதான் அழைப்பு வந்தது. அந்த அழைப்பிலேயே இத்தனை பேர் வந்திருக்கிறீர்கள் என்பதுதான் வழக்கறிஞர் அணியின் உயிரோட்டமும் உணர்வோட்டமும் மிக்க செயல்பாட்டைக் காட்டுகிறது.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழக்கறிஞர் அணி ஒரு போர்வீரன் போன்றது. தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள்: ”ஒரு போர்வீரன் களத்திற்குப் போகிறான் என்றால், எந்தக் கையில் அவன் வாளை ஏந்துகிறான், எந்தக் கையில் கேடயத்தை ஏந்துகிறான் என்பதை அவனே முடிவு செய்வான் என்று. அப்படி போர்க்களத்திற்குப் போகக்கூடிய அந்தப் போர்வீரன் கையில் வாளாகவும் கேடயமாகவும் இருக்க வேண்டிய நிலை இது. வாளாக நின்று போராடவும் வேண்டும்; கேடயமாக இருந்து வரக்கூடிய கேடுகளிலிருந்து நம்மைக்காப்பாற்றவும் வேண்டும். இந்த இரண்டு பொறுப்புகளையும் வழக்கறிஞர் அணி மிகச் சிறப்பாக எடுத்திருக்கிறது.

### தூய்மையான அணி!

அந்த வகையில், நம்முடையமதுரையில் நீங்கள் இதை நடத்துவது சாலப் பொருத்தமானஒன்று. காரணம், 2,000 வருடங்களுக்கு முன்னால், காப்பிய காலங்களிலேயே முதன்முறையாகப் பிராது கொடுத்து, வழக்கு தொடுத்து, வழக்கை நடத்திய இடம் இந்த இடம்.கண்ணகி! முதன்முறையாக வழக்கு தொடுத்து, ஒரு அரசனிடமே நேரடியாகப் போராடி, ”நீ செய்தது தவறு என்று தன் வழக்குக்குத் தானே வாதாடி, யார் குற்றவாளி என்பதை நிரூபித்துவிட்டுப் போகக்கூடிய வாய்ப்பைப் பெற்ற மண் இது. தமிழ்நாட்டிற்குத்தான் அந்தச் சிறப்பு உண்டு, வேறு எங்குமே இருக்காது. நீதி பரிபாலனத்தைப் பார்த்தீர்கள் என்றால், மனிதர்கள் மட்டுமல்ல, ஒரு மாடு கூட வந்து தனக்கான நீதியைப் பெற முடியும் என்று ஒரு காலத்தில் நிரூபிக்கப்பட்டதாகச் சொல்லக்கூடிய இடம் நம்முடைய தமிழ்நாடு.

எனவே, நீதி பரிபாலனத்தில் நமக்கு என்று ஒரு நீண்ட பாரம்பரியம் இருக்கிறது. அந்தப் பாரம்பரியத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இந்த ஜனநாயக இயக்கத்திற்கு, கழகத்தினுடைய தலைமைக்கு, கழகத்தினுடைய தோழர்களுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் வழக்கறிஞர் அணியாகிய நீங்கள் உதவிகளைச் செய்திருக்கிறீர்கள். தேர்தல் காலத்தில் பெரும் உதவியைச் செய்திருக்கிறீர்கள்; தேர்தலுக்குப் பின்னால் எதிர்க்கட்சியாக இருக்கக் கூடிய காலத்திலும் மிகப்பெரிய அளவில் செய்திருக்கிறீர்கள்.

இங்கே பேசும்போது சொன்னார்கள், கடந்த காலத்தில் பலருக்குப் பல வாய்ப்புகள் கிடைக்காமல் போயிருக்கக்கூடிய சூழ்நிலையை அண்ணன் மூர்த்தி அவர்களும் சொன்னார். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆளுங்கட்சியில் இருக்கக்கூடிய ஒரு வழக்கறிஞரே, ‘என்ன காரணத்தினால் தனக்கு அந்தப் பொறுப்பு கிடைக்கவில்லை’ என்று பகிரங்கமாகச் சொல்லக்கூடிய ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அப்படி ஒரு சொல்லை நம்முடைய வழக்கறிஞர் அணியைப் பற்றி யாராவது சொல்லி விட முடியுமா?

எந்த அளவிற்கு ஒரு தூய்மையான அணியாக, எல்லோரும் மதிக்கக்கூடிய அணியாக, பாராட்டக்கூடிய அணியாக, ஆளக்கூடிய பொறுப்பில் இருந்தாலும் எதிர்க்கட்சிப் பொறுப்பில் இருந்தாலும் எல்லாவற்றிலும் மிகச் சிறப்பாக இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கும்இந்தஅணிக்கு, விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பிலும், என்னுடைய தனிப்பட்ட சார்பிலும், இந்நிகழ்விற்குத் திரளாக வருகை தந்து இந்த அணியினைச் ஆங்காங்கேசிறப்புற வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய வழக்கறிஞர் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

தமிழ்நாட்டின் பழங்குடியினர்

# பாரம்பரிய மருத்துவ அறிவுக்கு உரிய உரிமைகள் பாதுகாக்கப்படுமா?

## ஒன்றிய அரசிடம் மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 –

தமிழ்நாட்டில் ஆயுர்வேதம் மற்றும் மருத்துவ மூலிகைகள் தொடர்பான பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள உள்ளூர் சமூகங்கள், பாரம்பரிய மருத்துவர்கள் மற்றும் பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு உரிய நியாயமான பலன்கள் கிடைப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவர் எழுப்பிய கேள்வியில், தமிழ்நாட்டில், குறிப்பாக தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், ஆயுர்வேதம் மற்றும் மருத்துவ மூலிகைகள் தொடர்பான பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள பழங்குடியினர் மற்றும் உள்ளூர் சமூகங்களின் அறிவுசார் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் பெற வேண்டிய நியாயமான பலன்களை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மேலும், ஆயுஷ் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மூலிகை வியாபாரிகள் மற்றும் பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ள சமூகத்தினருக்கு இடையே ஏற்படுத்தப்படும் பலன் பகிர்வு முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகள் என்ன என்பதையும், பாரம்பரிய அறிவை அனுமதியின்றி வணிகரீதியாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.



கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தகுதியுள்ள பழங்குடியினர் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு நிதியுதவி, ராயல்டி, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளனவா? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால், மாவட்ட வாரியான விவரங்கள் என்ன ?

பாரம்பரிய அறிவைக் கொண்டுள்ளவர்களின் உரிமைகளை வலுப்படுத்தவும், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தவும், அவர்களின் பாரம்பரிய அறிவுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு வழங்கவும், அவர்களுக்கு உரிய நியாய மான இழப்பீடு மற்றும் பலன்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொள்ள உள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும்

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனி பொறுப்பு) பிரதாப்ராவ் ஜாதவ்விடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

---

தி.மு.க. அயலக அணி குவைத் ஏற்பாட்டில், பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில்,

# முத்தமிழறிஞர் கலைஞர் எட்டாம் ஆண்டு நினைவு தினம் - மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

குவைத், ஆக. 12–

குவைத் நாட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி விராசாமி MP மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா Ex.MP ஆகியோரின் வழிகாட்டுதலின் படி தி.மு.க. அயலக அணி குவைத் மண்டல பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், குவைத் சால்மியா பகுதியில் உள்ள சால்மியா கிளினிக் மருத்துவ மனையில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் மிகச் சிறப்புடனும், மிகுந்த எழுச்சியுடனும் நடைபெற்றது.



இந்த இலவச மருத்துவ முகாமில் குவைத் வாழ் தமிழர்கள் மட்டுமின்றி இந்தியாவை சேர்ந்த அனைத்து மாநிலத்தை சேர்ந்தவர்களும் மற்றும் இலங்கை தமிழர்களும் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமில் பயன் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டத்தில் அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பொருளாளர் புதுவை அ.அறிவுமணி, இணைச் செயலாளர்கள் ஆயங்குடி சையது முஸ்தபா, குடந்தை சி.தியாகராஜன், துணைச் செயலாளர்கள் திருவாரூர் S.குமார், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது, மருதூர் ம. பிரேம்குமார் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஐ. ஜானவாஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### கழக நிர்வாகிகள்

குடந்தை த.மணிகண்டன், அரியலூர் சௌமியா பாஸ்கரன், தானிப்பாடி சுல்தானா (ஏ) J.ஒசூரா, இராமநாதபுரம் முகம்மது பைசான் அலி ( இராமநாதபுரம் பைசான்), தானிப்பாடி சே.அஷ்ரப்அலி, உடையார்பாளையம் S.செந்தில்குமார், பண்ருட்டி OPS.சிவராமன், திருக்கோவிலூர் அ.பொன்முடி, அரியலூர் S.பாஸ்கரன், கூத்தாநல்லூர் A.ஷாகுல் ஹமீது, கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப்பேட்டை முகமது ஹுசைன், கோட்டை B.மோதிலால், தியாகதுருகம் B.காதர், லட்சுமாங்குடி சசிகுமார், பரமக்குடி P.மோகன், திருவாரூர் திருவரங்கன், விருத்தாசலம் J.முபாரக், தக்கலை ஜோசப் பெர்லின், கள்ளக்குறிச்சி பெ.சின்னசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம், குவைத் தமிழ் மக்கள் சேவை மையம், கலகலப்பு நண்பர்கள் குழு, குவைத் தமிழ் ஓட்டுநர்கள் சேவை மையம், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவை மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகி இராணிப்பேட்டை மருத்துவர். கிளாட்வின் பாக்கியராஜ், எழுத்தாளர் நிர்மலாதேவி தமிழரசன், இந்திய தூதரக பணியாளர் மற்றும் சமூக ஆர்வலர் திரு. ஷாஜகான், சமூக சேவகர் அலிபாய், திராவிட பற்றாளர் சத்திரமனை அசன் முகமது, கழக கொள்கை பற்றாளர் தோழர் சபீனா, சமூக ஆர்வலர் சலீம், சூப்பர் சென்னை ரெஸ்டாரண்ட் உரிமையாளர் பாட்ஷா மற்றும் குவைத்தின் இளம் பேச்சாளர் ”இளந் தென்றல் ஷஹீரா ஆகியோர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழினையும், இலவச மருத்துவ முகாம் நடத்துவதின் முக்கியத்துவத்தையும், தி.மு.க. அயலக அணி குவைத் மண்டலத்தின் செயல்பாடுகளையும் புகழ்ந்துரைத்தனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் அமைப்பின் சார்பாக காலை சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியில் அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் A.S.முகமது ரபீக் நன்றி கூறினார்.

---

தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம்!

# தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்காக சட்டம் இயற்ற வேண்டும்!

## சட்டப்பேரவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் குறித்த தனி தீர்மானத்தை வரவேற்று முனைவர் கோவி, செழியன் பேச்சு!

**சென்னை, ஆக.12-**

**சட்டப்பேரவையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் குறித்து முதலமைச்சர் கொண்டுவந்த தனித் தீர்மானத்தை தி.மு.கழகம் சார்பில் வரவேற்று முனைவர் கோவி. செழியன் பேசினார். அப்போது அவர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாட சட்டமியற்றி தாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.**



*சட்டப்பேரவையில் முதல்வர் கொண்டுவந்த தமிழ்த் தாய்த் வாழ்த்து தனித்தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வரவேற்று முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:*

*பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரை வணங்குகிறேன். காஞ்சி மன்னன் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டைக் கற்றுத் தந்த பேராசான் அறிஞர்அண்ணாவை வணங்குகிறேன்.*

*என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும் நான் கட்டுமரமாக மிதப்பேன் நீங்கள் சவாரி செய்யலாம் என்று தியாக உள்ளத்தோடு வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.*

*எங்கள் இயக்கத் தலைவர் ஓய்வறியா உழைப்பாளி அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.*

*எங்களை இயக்குகிற எதிர்க்கட்சித் தலைவர் உதய நிதி ஸ்டாலின்அவர்களை வணங்குகிறேன்.*

*பேரவைத்தலைவர்அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், முன் வரிசைத் தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை 2011, 2016, 2021, 2026 தேர்தல்களில் நான்கு முறை திருவிடைமருதூர் தொகுதியில் தேர்வு செய்த எனது தொகுதி மக்களுக்கும் மனமார்ந்த நன்றியைச் சொல்லி,*

*பேரவைத் தலைவர் அவர்களே முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற தமிழ்த்தாய் பாடல் குறித்த தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழிமொழிகிறேன், வழிமொழிகிறேன், வழிமொழிகிறேன் ஆதரிக்கிறேன்.*

*இந்தச்சொற்றொடரை பயன்படுத்த காரணமாக இருந்த ஆருயிர் அண்ணன் தலைவர் தளபதி அவர்களுக்கும், வாய்ப்பினை வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர் உதய நிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் மற்றும் கொறடா அவர்களுக்கும்திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் 1891 இல் பாயிரம் என்ற பாடலில் எழுதப்பட்ட வரிகள். அருமையான சொற்றொடர்கள். என்றும் இளமை குறையாத மொழி தமிழ் மொழி என்பதை நிரூப்பித்த பாடல். இப்பாடல் 1970 இல் முதலமைச்சர் தந்திருக்கின்ற தனித் தீர்மா னத்தின் படி 11.3.1970 தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அரசு நிறுவனங்களில், பள்ளிகளில், கல்லூரிகளில், பொது நிறுவனங்களில் பல் கலைக்கழகங்களில் பாடிட வேண்டும் என்று அந்தப் பாடலை முதன் முதலில் அரசாணை வெளியிட்டு இது தான் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் என்ற பாட வைத்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.*

*தமிழ்மொழிக்கு என்று சில சிறப்புகள் உண்டு. தாயைப் பழித்தவனை யார் தடுத்தாலும் விடேன், தமிழைப் பழித்தவனை தாய்த் தடுத்தாலும் விடேன் என்று வீரப் பெருமை பேசுகின்ற தமிழர்களாகிய நாம் இன்றைக்கு தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மூன்றாமிடம் என்று சொல்கின்ற போதுதான் மிகுந்த அவமானத்துக்குரியவர்களாக மாறினோம். தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து அரசாணையை பல முறை பாடப்பட்ட போதும் கவனக்குறைவாக இருப்பது, அலட்சியப் படுத்துவது என்று நிலை இருந்தது.*

*யார் அலட்சியப்படுத்தினார்கள் என்ற விவாதத்திற்குள் நாள் போக விரும்பவில்லை. இதை அறிந்த முன்னாள் முதலமைச்சர் எங்கள் கழகத்தின் தலைவர் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்கள் முதலமைச்சர் வடித்திட்ட அந்த தனித்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியின்படி 2021 டிசம்பர்12 இல் கட்டாயம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட வேண்டும் என்று அரசாணை வெளியிட்டு அதனை நிலைநிறுத்திய பெருமையும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சாரும்.*

*அதனைத் தொடர்ந்து தமிழ்மொழியின் பெருமையை சொல்லக்கூடிய வகையில் நீச மொழி என்று பேசப்பட்ட தமிழை தேச மொழி ஆக்கி செம்மொழி ஆக்கியது அன்புத் தலைவர் கலைஞரின் திராவிட முன்னேற்றக் கழகம்.*

*உலகத்தமிழ் மாநாட்டை நடத்தி உலகத்திற்கு தமிழ் மொழியின் பெருமையச் சொன்னது அன்புத்தலைவர் கலைஞரின் திராவிட முன்னேற்றக் கழகம்*

*சென்னையில் செம்மொழி தமிழ்ஆய்வு நிறுவனத்தை கொண்டு வந்து தமிழ்மொழி சிறக்க அரிய பல பணிகளைச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்.*

*கரந்தையில் பாடப்பட்ட அந்தத் தமிழ்ச்சங்க பாடல், இன்றைக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வெந்த புண்ணில் வேல் என்பது போல், எந்த பாடலை யாத்துத் தந்தாரோ அந்தப் பல்கலைக் கழகத்தில் தாய்மொழியின் அடையாளமாக இருக்கின்ற தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் மூன்றாம் இடம் தள்ளப்பட்ட வேதனை.*

*அனைத்துக் கட்சிகளும் கண்டித்த நிலையில் எங்கள் கழகத்தின் தலைவர் கடுமையான முறையில் கண்டித்தார். எதிர்த்தார். அதற்கும் ஒரு செயல்வடிவம் கொடுக்கக்கூடிய வகையில்தான் இன்றைக்கு தனித்தீர்மானத்தை நாம் கொண்டுவந்து இருக்கின்றோம் சட்டப் பேரவையில் என்றைக்கும் நினைத்துப் பார்க்கும்.*

*இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஆதரிக்கின்ற இந்த நேரத்தில் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் தந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.*

*தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை கொண்டு வந்தது கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகம்*

*அதை சட்டப்படி கொண்டு வர வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்தது தளபதி மு.க.ஸ்டாலின். திராவிட முன்னேற்றக் கழகம். அதை தொடர் ஓட்டமாக எடுத்துச் சென்று அதை கட்டிக் காத்த பெருமை எங்கள் எதிர்க்கட்சி தலைவர் உதய நிதி ஸ்டாலின். திராவிட முன்னேற்றக் கழகம்*

*இவ்வளவு சிறப்புகளை கொண்ட தமிழ்மொழிக்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரிக்கிறோம்.*

*ஆனால் முதலமைச்சரும், இந்த அவையும், பேரவைத் தலைவரும் அதனை சட்டமாக்கித் தந்தால் எவரும் இந்த தவறுக்கு பொறுப்பாக மாட்டார்கள், அதற்கு நிலையான உறுதியான இரும்புத் தன்மையான அதிகாரம் கிடைக்கும் என்ற நிலையில் ஆதரிக்கிற அதே நேரத்தில் சட்டவடிவமாக்கித் தாருங்கள் என்ற வேண்டுகோளை வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமைகிறேன்.*

*இவ்வாறு கோவி.செழியின் முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வரவேற்றார்.*

*இத்தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.*